**இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு திட்டம் (i-வீதி - II) - 2018**

இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு திட்டம் (i-வீதி - II) இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 நொவம்பர் 22 ஆந் திகதி 3579–எஸ்ஆர்ஐ மற்றும் 3580–எஸ்ஆர்ஐ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரிவு 4.03 இன் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கிராமப்புர சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையிலான வீதிகளின் அடயக்கூடிய தன்மையினை அதிகரித்தல் கருத்திட்டத்தின் குறிக்கோள்களாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து திறனை அதிகரிப்பது நீண்டகால தாக்கமொன்றாகும். கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் சிவில் வேலைகள், ஆலோசனை வேலைகள், செயற்திட்ட கண்கானிப்பு பிரிவு, பயன்பாட்டு மாற்றம், வரிகள், வட்டி மற்றும் ஒப்படைப்பு கட்டணங்கள் எனப் பெயரிடப்படும் 05 கூறுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 384,382 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1,084.60 மில்லியனானதுடன் அதில் ரூபா 153,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 900 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 31,382 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2018 ஜூலை 20 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2028 ஜூலை 19 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பெறுமதி ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| வெளிவளத்துறை திணைக்களத்தினால் பேணப்பட்ட பதிவுகளின் பிரகாரம், ரூபா 2992.16 தொகையான மீளளிப்பு மீளாய்வாண்டில் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், அதனுடன் தொடர்புடைய மீளளிப்பு ரூபா 3,761.08 மில்லியன் தொகை நிகழ்சிசித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 768.92 | இணக்கஞ் செய்யப்படாத மீதிகள். | பதிலளித்திருக்கவில்லை. | தொடர்புடைய பெறுமதிகள் காலத்திற்குகாலம் இணக்கச்செய்யப்படல் வேண்டும். |

**2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| மூலக்கூறு | | நடவடிக்கை | எதிர்பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் | அடையப்பெற்ற பௌதிக செயலாற்றல் | கணக்காய்வு விடயம் | விளைவு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| சிவில் வேலைகள் | (i) | வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகாணங்களிலுள்ள 400 கிலோ மீற்றர் தேசிய வீதிகளின் புனரமைப்பு. | | | செயற்பாடுகள் 2018 திசெம்பர் 31 இல் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் காலப்பகுதி நீடிப்பதற்கான சாத்தியம் மற்றும் செலவில் அதிகரிப்பு. | விபரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகாணங்களிலுள்ள 3750 கிலோ மீற்றர் கிராமப்புர வீதிகளின் புனரமைப்பு. | ஊவா மாகாணத்திலுள்ள 1048 கிலோ மீற்றர் வீதிகளிலிருந்து 20.7 சதவீதம் பௌதிக செயலாற்றம். | ஊவா மாகாணத்திலுள்ள 1048 கிலோ மீற்றர் வீதிகளிலிருந்து 13.8 சதவீதம் பௌதிக செயலாற்றம். | ஏனைய மாகாணங்களிளுள்ள வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக வட்டி மற்றும் ஒப்படைப்பு கட்டணங்கள் விதிக்கப்படலாம். குடியிருப்புக்கான வீதியினை அணுகக்கூடிய தன்மையின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் உரிய நேரத்தில் அடையப்படாமல் இருக்கலாம். | ஒப்பந்ததாரர்களினால் நிதி ரீதியான சிரமங்கள் எதிர்கொள்ளப்பட்டிருந்ததுடன் பாதகமான காலநிலையும் கானப்பட்டது. |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | பௌதிக செயல்முன்னேற்றத்தை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது இல்லையெனில் ஒப்பந்தம் சார்ந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| **கணக்காய்வாளர் பரிந்துரைகள்** | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள், அதன் குறிக்கோல்கள் எதிர்பார்த்த காலப்பகுதிக்குள் அடைவதற்கு நடவடிக்கைகளை திட்மிடுவதனூடாக விபரமாக அடையாளப்படுத்தப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு வசதியளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை தக்கவைத்து கொள்வதற்கு ஒப்பந்தக்காரர்கள் அனுமதி அளித்திருந்ததுடன் அவை தொடர்பான கிரயத்தினை எதிர் கொள்வதற்கு ஒட்டு மொத்த தொகை ஒன்றாக ரூபா 87.20 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது. | ஒப்பந்தத்தின் கிரயத்தில் மேலதிக மதிப்பீடு. | ஒப்பந்த காலப்பகுதியின் இறுதியில் ஒப்பந்தகாரருக்க சொந்தமான சொத்துக்களின் உரிமைத்துவம் காணப்படும் பொழுது தொடர்புடைய சொத்தின் குறைத்தெழுதப்பட்ட இழிவுப்பெறுமதியுடன் ஒப்பந்தக்காரரின் கேள்விமனு விலை கொண்டிருத்தல் வேண்டும். ஆகையால் செயற்திட்டத்திற்கு எவ்விதமான பாதகமான தாக்கமும் காணப்படவில்லை. | ஒரு பொது நடைமுறையாக உரிய சொத்துக்கள் முதலாளியினால் தக்கவைக்கப்பட்டுள்ளது. ஆகையால் ஏனைய கொடையளிப்பு நிதிசெயற்திட்டங்களினால் வழங்கப்பட்ட ஏனைய ஒப்பந்த பொதிகளுடன் ஒப்பிடும் போது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான ஒப்பந்தத்தின் கிரயம் குறைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை - மட்டக்களப்பு வீதி, அல்லை - கந்தளாய் வீதி மற்றும் கரையோர வீதிகளின் பகுதிகளின் நிர்மான வேலைகளுக்காக விலைமனுவானது செயற்திட்த்தினால் அழைக்கப்பட்டிருந்ததுடன் திருகோணமலை ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு செயற்திட்டம் எனப் பெயரிடப்பட்ட ஏனைய கொடை வழங்கல் செயற்திட்டத்தின் கீழான வீதிகளின் உரிய பகுதிகளின் மீது முன்னைய ஒப்பந்தக்காரரினால் எழுதப்பட்ட நடுவர்தீர்ப்பு வழக்குகளை கருத்தில் கொள்ளாது அதன் மீது மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக சட்டமா அதிபரிடமிருந்து கோரப்பட்ட | ஒப்பந்தத்தின் கையளிப்பு மீது சர்ச்சைக்கான சாத்தியம். | கொள்வனவு செயன்முறையை செயற்படுத்த 2019 மே 15 இல் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி கொடுக்கப்பட்டது. | மேலதிக செலவுகளை குறைத்துக்கொள்வதற்காக செயற்திட்டமானது நடுவர் தீர்ப்பு வழக்குகளின் விடையங்களை கருத்தில் கொள்ளல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்ட அனுமதியானது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட பெறப்பட்டிருக்கவில்லை. | | | |
| (இ) | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் உப பிரிவு 4.2 இன் பிரகாரம், செயற்திறன் பாதுகாப்பு பிணைகள் ஒப்பந்தக்காரர்களால் தங்கள் சொந்த செலவில் செய்தல் வேண்டும். இருப்பினும் செயற்திட்டமானது அதன் மேலான செலவை எதிர்கொள்ள தனியான ஒரு கொடுப்பனவு உள்ளடக்கியிருந்தது. இது மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேண்டுதல்களுக்கு முரணாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் செயலாற்றல் பாதுகாப்பு பிணைகளினை வழங்குவதற்கான செலவுகளை மேற்கொள்ள ஒப்பந்தக்காரர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதன்படி, ஊவா மாகாணத்திலுள்ள வீதிகளின் நிர்மானத்தில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரர்களுக்கு மொத்தமாக ரூபா 132.80 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தகாரர்களின் செலவில் மேலதிக மதிப்பீடு. | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் உப பிரிவு 4.2 ஆனது கிழக்கு, வடக்கு, மேல் மாகானங்களின் பொதிகள் அதன்படி திருத்தப்பட்டிருந்ததுடன் அளவைப்பட்டியலில் உள்ள செலுத்துகை வகைகளில் இருந்து அகற்றப்பட்டது. | அளவைப்பட்டியலின் மீள்பரிசீலனையானது விலைமனுபத்திரங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் கொள்வனவு நிபுணர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |